# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2022 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம்*

---

*(2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, யூன் மாதம் 17 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***2022 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம்***

[*2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.-ஓ. 8/2019*

***2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

***1.*** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்*

***2.*** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"மின்சாரப் பிறப்பாக் கத்திற்கு விலைகோரும் நடை முறையொன்றில் பங்கேற்றல்*

*8.* மின்சாரப் பிறப்பாக்கத்திற்காக விலை கோரும் நடைமுறையொன்றில் எவரேனுமாள் பங்குபற்றலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்*

***3.*** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(1) எவரேனுமாள், மின்சாரப் பிறப்பாக்கத்துக்கான பிறப்பாக்க உரிமமொன்றின் வழங்குகைக்காக விண்ணப்பிப்பதற்குத் தகவுடையவராதல் வேண்டும்."; அத்துடன்

(2) அதன் (1அ) என்னும் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (4) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில்–

(அ) "அபிவிருத்தி செய்யப்படும் ஏலவேயுள்ள ஏதேனும் பிறப்பாக்கப் பொறித்தொகுதியின் விசாலிப்பு தொடர்பில் பின்வரும் விடயங்களில் ஏற்புடைத்தாதலாகாது:-" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அபிவிருத்தி செய்யப்படும் அல்லது அபிவிருத்தி செய்யப்படவேண்டிய ஏலவேயுள்ள ஏதேனும் பிறப்பாக்கப் பொறித்தொகுதியின் விசாலிப்புத் தொடர்பில் பின்வரும் விடயங்களில் ஏற்புடைத்தாதலாகாது:-" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியில், "பிறப்பாக்கத் தொகுதிக்கு அல்லது விசாலிப்பிற்கு;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிறப்பாக்கத் தொகுதிக்கு அல்லது விசாலிப்பிற்கு; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*